# TNPSC GROUP I MAIN EXAM 2025

## MODEL EXAM I

### தாள் 1 - கட்டாய தமிழ் தகுதித் தேர்வு

**Total Marks: 100** **Time : 3 hrs**

**கேள்வி எண் 1** **10 மதிப்பெண்கள்**

1. **பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

சுற்றுச்சூழல்

பொருள்: சுற்றுச்சூழல் என்பது ஒரு உயிரினத்தைச் சுற்றியுள்ள அனைத்து உயிர் உள்ள மற்றும் உயிரற்ற கூறுகளையும் குறிக்கிறது. இதில் காற்று, நீர், மண், சூரிய ஒளி, தாவரங்கள், விலங்குகள் மற்றும் பிற உயிரினங்கள் அடங்கும்.

கூறுகள்: சுற்றுச்சூழலின் முக்கிய கூறுகள் வளிமண்டலம் (காற்று), நிலக்கோளம் (பாறைகள் மற்றும் மண்), நீர்க்கோளம் (நீர்) மற்றும் உயிர்க்கோளம் (உயிரினங்கள்) ஆகியவை ஆகும்.

சூழலியல்

பொருள்: சூழலியல் என்பது உயிரினங்களுக்கும் அவற்றின் இயற்கைச் சூழலுக்கும் இடையிலான உறவுகளை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்யும் துறையாகும்.

ஆய்வு: இது உயிரினங்களை தனிநபர்கள், மக்கள் தொகைகள், சமூகங்கள் மற்றும் உயிர்க்கோள மட்டங்களில் ஆய்வு செய்கிறது.

முக்கியத்துவம்: உயிரினங்களின் பரவல், அவற்றின் வளர்ச்சி, படிவளர்ச்சி மற்றும் உயிர்வாழ்வு ஆகியவற்றில் சுற்றுச்சூழலின் தாக்கம் போன்றவற்றை சூழலியல் புரிந்துகொள்ள உதவுகிறதுபொருள்:

**கேள்வி எண் 2:** **10 மதிப்பெண்கள்**

2. **பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

Robotics with Artificial Intelligence in education has increased over the last few years. It is now being used for both teachers and students to help in education, which can be seen to improve student engagement and safety. With AI's current development, robotics in education is inevitable. Robots can be an excellent resource for learning for both students and teachers – a way to explore a topic in-depth without getting bored. For teachers, this means robots can provide a way to have more one-on-one time with students who need additional help. It also allows them to experiment with new ways of teaching, which is essential when trying to reach different types of learners. For students, it's a chance to teach themselves something new without the pressure of being the only person in class or having their peers judge them for making mistakes. Robots can offer that space where they don't feel embarrassed if they don't get something right away. Robotics is vital for students because they can teach them that engineering is more than just solving problems on paper or drawing on a mat. They can see the outcome of their efforts and the final result.

Teachers can also use robotics as an instructional tool to teach lessons about current events or even math concepts like fractions. As technology evolves, it will undoubtedly play an essential role in people's lives.

**கேள்வி எண் 3:** **10 மதிப்பெண்கள்**

**3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

கடலில் எதிரிகளுக்கு உண்மையான இராட்சசனாய் வலம் வருபவன் நீர் மூழ்கிக் கப்பல் ஆகும். நீர்மூழ்கிக்கப்பலால், அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி நீருக்கு உள்ளேயே இருந்து ஏவுகணைகளைத் தாக்கவும் முடியும். ஒரு வேளை, சில அறிவியல் விதிகளைத் தெரியாமல் பயன்படுத்தினால், அதே அறிவியலால் நிச்சயம் அழிவு நேரும். எந்த மாதிரியான விதி என்று பின் பார்ப்போம். அதற்கு முன் எப்படி நீருக்குள் நீர் மூழ்கிக்கப்பல் மூழ்கியது. வேலை செய்கிறது என்பதை அறிந்துகொள்வோம். 1620 இல் தொடங்கி, பலப்பல வளர்ச்சிகளைக் கண்டு, நீர்மூழ்கிக்கப்பல் முழு அந்தஸ்து பெற்றது, முதல் உலகப்போரில்தான், சில மணி நேரம் மட்டும் மூழ்கக்கூடிய நிலையிலிருந்த நீர்மூழ்கிக்கப்பல் 6 மாதங்கள் வரை நீருக்குள் இருக்கும் நிலையைத் தொழில்நுட்ப வளர்ச்சியால் பெற்றது. எடுத்துக்காட்டாய், ஒரு நாயணத்தைத் தண்ணீரில் தூக்கிப் போட்டால் அது உள்ளே மூழ்கிவிடும். அ.்.தாவது, அ.்.து தன் எடைக்கேற்ப நீரை வெளியேற்றவில்லை அதனால் தான் அது மூழ்கிவிடுகிறது. அதே போல், நீர்மூழ்கிக்கப்பல் வடிவம், எவ்வித மாற்றமின்றி நீரின் மேற்பரப்பில் மிதக்கும் வகையில் உருவாக்கப்படுகிறது. நீர்மூழ்கிக்கப்பல் நீரில் மூழ்க வேண்டுமன்றோ? நீர்மூழ்கிக்கப்பலின் எடையைக் கூட்டினால், அதிக எடைகொண்ட நீரை வெளியேற்றாமல் நாணயத்தை போல் அது நீரில் மூழ்கும். ஆனால், எவ்வளவு மீட்டர் அல்லது அடிவரை நீர்மூழ்கிக்கப்பல் மூழ்க வேண்டும் என்பதை முடிவு செய்ய நாம் சரளைத் தொட்டிகளை (Ballast tank)ப் பயன்படுத்த வேண்டும். அந்தத் தொட்டிகள் நீர்மூழ்கிக் கப்பல்களைச் சுற்றி வடிவமைக்கப்பட்டிருக்கும். அவை காற்றால் நிரப்பப்பட்டிருக்கும். சுற்றி காற்று இருப்பதால் கப்பல் நீரில் மிதக்கும். காற்றை வெளியேற்றினால் அந்த இடத்தில் நீரானது நிரம்பும். இப்படி நிரம்பினால் எடை அதிகரிக்கும் நீரில் மூழ்கத் தொடங்கும்.

**கேள்வி எண் 4:** **10 மதிப்பெண்கள்**

**4. பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

வழக்கு என்பது ஒரு நபர் அல்லது குழுவுக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் சட்ட நடவடிக்கை ஆகும். வழக்கு இரண்டு வகைப்படும். குடிமை வழக்கு மற்றும் குற்றவியல் வழக்கு. குடிமை வழக்கில், சொத்து, உறவுமுறை, உரிமை போன்ற விஷயங்கள் சம்பந்தப்பட்டிருக்கும். குற்றவியல் வழக்கில், சட்டத்திற்கு எதிராக நடந்த குற்றச்செயல்கள் அடங்கும். வழக்குகளை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் நடத்துகின்றனர். நீதிமன்றம் சட்டத்தின்படி தீர்ப்பு வழங்கும். ஒரு வழக்கு பல ஆண்டுகள் நீடிக்கக்கூடும். நீதிமன்றம் உரிய சாட்சிகள் மற்றும் ஆதாரங்களை வைத்து முடிவெடுக்கும். மக்கள் அனைவரும் நீதிக்கு நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதே ஒரு நாட்டு நெறி.

**வினாக்கள்**

1. வழக்கு என்றால் என்ன?
2. வழக்குகள் எந்த இரண்டு வகைப்படும்?
3. குற்றவியல் வழக்கில் என்ன அடங்கும்?
4. வழக்குகளை யார் நடத்துவர்?
5. நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் போது என்னக் கொண்டு முடிவெடுக்கும்?

**கேள்வி எண் 5:** **10 மதிப்பெண்கள்**

**5. பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

**நாட்டார் அரங்கக் கலைகள் - சடங்கு சார் கலைகள் - பாடல்சார் கலைகள் - கருவிசார் கலைகள்**

**கேள்வி எண் 6:** **15 மதிப்பெண்கள்**

**6. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

1. திருக்குறளில் ‘அறன்வலியுறுத்தல்’ எனும் அதிகாரம் உலக மக்கள் அனைவருக்கும் ஏற்ற அறங்களை வலியுறுத்துகிறது – நிறுவுக
2. வள்ளுவரின் நிதி மேலாண்மை குறித்து எழுதுக
3. நல்ல குடிமகன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர் வழி நின்று விளக்குக
4. அன்புடைமை எனும் அதிகாரத்தில் வள்ளுவர் உணர்த்தும் மனித நேயச் சிந்தனைகள் விளக்குக
5. நடுவு நிலைமை குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம் (ஏதேனும் ஒன்று)**

1. கோயம்புத்தூர் மாவட்டம் பிச்சணர் சிற்றூரில் நூலகம் அமைத்திட திட்ட மதிப்பு ஒன்றை தயார் செய்க
2. தமிழக அரசின் ‘விடியல்’ பயணத்திட்டம் குறித்து ஒரு கருத்துரு தயார் செய்க
3. தமிழ் வளர்ச்சி துறை சார்பில் மாநில அளவில் உலக தாய்மொழி நாளை கொண்டாட ரூ.5,00,000/- க்கு நிதி ஒப்பளிப்பு செய்தல் தொடர்பாக அரசாணை ஒன்றை தயார் செய்க

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. பண்பாடு
2. நல்லறம்
3. வானியல் அறிவு
4. புகலிடம்

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. அக்கம் பக்கம்
2. பிக்கல் பிடுங்கல்
3. ஈடு இணை
4. அக்குவேர் ஆணிவேர்

**c. பிரித்து எழுதுக**

1. எழுத்தெல்லாம்
2. செயற்கரிய
3. வியனுலகத்து
4. பெரிதுவக்கும்

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. எல்லோரும் அரங்கத்தில் கூடியிருந்தனர்
2. புதிதாக அமல்படுத்தப்பட்ட கொள்கைகள் குறித்து அனைவரிடமும் கருத்து கேட்டிருந்தோம்
3. எல்லாம் சரியாக நடந்தேறிக் கொண்டிருந்தது
4. காந்தியடிகள் பொய் பேசுவார்

APOLLO STUDY CENTRE

**e. பிழை நீக்கி எழுதுக**

1. மாணவர்கள் தேர்வு எழுதினர்
2. ஆசிரியர் நாளை பாடம் நடத்தினார்
3. பாம்புக்குக் கண்ணே காதாக உதவுகின்றன
4. கதவு மெள்ளத் திறந்தது.

APOLLO STUDY CENTRE



அறிவுக்கு ஏற்றது, மக்களுக்கு நன்மை பயப்பது,
மக்களின் அறிவை வளர்ச்சியடையச் செய்வது எதுவோ
அதைப் பற்றியே பேசு.

-தந்தை பெரியார்